[1974 சனவரி 23

பலாப்பழ உற்பத்திக்குக் கடன்

*110 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பலாப்பழங்களை உற்பத்தி செய்ய அரசு ஏதேனும் உதவி வழங்கி வருகின்றதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

தாசானிட் மீதான சுங்க வரி

*111 வினா.—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாசானிட் இறக்குமதி மீதான சுங்க வரியை விலக்களிக்கும்படி மத்திய சர்க்காரை இவ்வரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உருளைக் கிழங்கைத் தாக்குகிற பூச்சிகளை ஒழிக்க ஜெர்மனியிலிருந்து தாசானிட் என்ற இந்த மருந்து வரவழைக்கப்பட்டது. அந்த மருந்திற்கு விலை யில்லை. ஆனால் அதற்கு இறக்குமதி வரியாக 56,42,000 ரூபாய் மாநில அரசால் செலவிடப்பட்டது. அந்தப் பணத்தைத் திரும்பத் தந்துவிட வேண்டுமென்று மத்திய அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, இந்த தாசானிட்டுக்கு சுங்கவரி விதிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு வரிச் சுமை அதிகமாகிறது, ஏக்கருக்கு குறிப்பிட்ட தொகையை இதற்காக வசூலிக்கிறார்கள். இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு மீண்டும் இந்த அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி நானே நேரிலே கடிதம் எழுதியிருக்கிறேன், நேரில் பேசியும் இருக்கிறேன். அடுத்த தடவை நம்முடைய மாநிலத்திலிருந்து அமைச்சர்கள் செல்லும்பொழுது இதுபற்றி அங்கேயுள்ள விவசாயத் துறை அமைச்சரிடம் நேரில் வற்புறுத்திக் கேட்க